**செ.வெ.எண்: 10** **நாள்: 03.09.2016**

<u>பத்திரிகைச்செய்தி</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் எதிர் வரும் 2016 அக்டோபர் திங்களில் நடைபெற உள்ள உள்ளாட்சி தேர்தல்களுக்கு அமைக்கப்பட உள்ள வாக்குச் சாவடிகளின் வரைவு பட்டியல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளவாறு கீழ்க்கண்ட இடங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை
2. மாவட்ட ஊராட்சி அலுவலகம், புதுக்கோட்டை
3. அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்
4. அனைத்து கிராம ஊராட்சி அலுவலகங்கள்
5. தொடர்புடைய வாக்குச் சாவடிகள்

வாக்காளர்கள் தங்கள் வார்டுக்கு அமைக்கப்பட உள்ள வாக்குச் சாவடி பற்றிய விவரங்களை மேற்கண்ட இடங்களில் தெரிந்து கொள்ளலாம். அமைக்கப்பட உள்ள வாக்குச் சாவடிகள் குறித்து பொதுமக்கள் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் மாவட்ட பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை அல்லது மறுப்புறைகளை 10.9.2016க்குள் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் எழுத்துப் பூர்வமாக தெரிவிக்கலாம்.

இந்த வாக்குச் சாவடிகளின் வரைவு பட்டியல்களின் மீது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்ட பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கருத்துக் கோரும் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் எதிர்வரும் 7.9.2016 மாலை 5.00 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடத்தப்பட உள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**